


**30. 12. 2025**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ராமேஸ்வரத்தில் 4-வது கட்ட காசி தமிழ் சங்கமம் நிறைவு விழாவில் குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் இன்றுமாலை பங்கேற்கிறார்.

2. 2026-27ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை தொடர்பாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பொருளாதார வல்லுநர்கள் மற்றும் நித்தி ஆயோக் நிபுணர்களுடன் புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொள்கிறார்.

3. தமிழ்நாட்டில் 10 லட்சம் மாணாக்கருக்கு விரைவில் மடிகணினிகள் வழங்கப்படும் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. ஸ்ரீரங்கம் ரங்கநாதர்சுவாமி திருக்கோவில் உள்ளிட்ட வைணவ திருத்தலங்களில் பரமபதவாசல் திறப்பு பக்தி சிரத்தையுடன் இன்று நடைபெற்றது.

5. இந்தியா இலங்கை மகளிர் அணிகளுக்கிடையேயான 5ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் இன்று இரவு நடைபெறுகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**************

சி.பி.ராதாகிருஷ்ணன்

ராமேஸ்வரத்தில் 4-வது கட்ட காசி தமிழ் சங்கமம் நிறைவு விழாவில் குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் இன்றுமாலை பங்கேற்கிறார்.

காசிக்கும் தமிழகத்திற்கும் இடையேயான தொன்மையான தொடர்புகளை நிலைநாட்டும் வகையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

வாரணாசியில் கடந்த 2ஆம் தேதி தொடங்கிய இவ்விழாவில் தமிழகத்தை சேர்ந்த ஆசிரியர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பங்கேற்றனர்.

தமிழ்மொழியின் சிறப்பை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்லும் நிகழ்வாக இவ்விழா கொண்டாடப்பட்டதோடு, காசிக்கும் தமிழகத்திற்கும் இடையிலான கற்றல், கலாச்சார பரிவர்த்தனைகள் இதில் பறைசாற்றப்பட்டது.

நிறைவு விழாவில் மத்திய அமைச்சர்கள் திரு. தர்மேந்திர பிரதான், டாக்டர் எல்.முருகன், தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**************

பிரதமர்

2026-27ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை தொடர்பாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பொருளாதார வல்லுநர்கள் மற்றும் நித்தி ஆயோக் நிபுணர்களுடன் புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொள்கிறார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை எதிர்கால முன்னுரிமை திட்டங்கள் குறித்து நிபுணர்கள் மற்றும் வல்லுநர்களிடம் பிரதமர் கேட்டறிகிறார்.

இதனை தொடர்ந்து வளர்ச்சி, பொருளாதார ஸ்திர தன்மை உள்ளிட்ட பல்வேறு சவால்களை

எதிர்கொள்வதற்கான சீர்திருகத்தங்களின் அவசியம் குறித்தும் ஆராய்கிறார்.

அடுத்த கட்ட பொருளாதார திட்டமிடலை தயார் செய்யும் வகையில் நித்தி ஆயோக் தேவையான ஆலோசனைகளை பிரதமரிடம் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**************

ராம் மோகன் நாயுடு

பெங்களூர் ஹிந்துஸ்தான் ஏரோ நாட்டிக் நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட துருவ் ஹெலிகாப்டர் பயணத்தை மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு இன்று துவக்கிவைத்தார்.

சிவில் விமான போக்குவரத்து துறையில் சுய சார்பு பாரதத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இந்த ஹெலிகாப்டர் திகழ்வதாக அவர் கூறினார்.

ஹெலிகாப்டர் மூலம் மண்டல தொடர்புகளை முன்னெடுத்து செல்ல மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறிய அவர், சிவில் போக்குவரத்து ஹெலிகாப்டர்களை உருவாக்குவதில் இந்துஸ்தான் நிறுவனம் இன்றியமையா பங்காற்றும் என்று குறிப்பிட்டார்.

**************

அமித்ஷா

மேற்குவங்கத்தில் வரும் சட்டப்பேரவை தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் பிஜேபி வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஊடுருவலை தடுப்பது, மேற்குவங்கத்திற்குள் முறைகேடாக நுழைந்தவர்களை அகற்றுவது என்ற அடிப்படையில் வரும் சட்டப்பேரவை தேர்தலை பிஜேபி அங்கு சந்திக்க உள்ளதாக குறிப்பிட்டார்.

மேற்கவங்க பகுதிக்குள் முறைகேடாக நுழைபவர்களால் தேசத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவித்தார்.

**************

பிரதமர்

நாட்டின் வளர்ச்சி பாதையில் அரசின் கொள்கைகள் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் சீர்திருத்தங்களின் ஆண்டாக மேம்பட்ட நிலையில் 2025ஆம் ஆண்டு கலாச்சார துறையின் வளர்ச்சி குறித்த சிறப்பு செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

அயோத்தியாவில் ஸ்ரீராம்ஜென்ம பூமி திருக்கோவிலின் திருப்பணிகள் நிறைவடைந்த நிலையில் சென்ற மாதம் ராமர்கோவிலின் உச்சியில் தர்மத்தையும் நீதியையும் நிலைநாட்டும் காவி நிற கொடியை பிரதமர் திரு.நரேந்திரமோடி ஏற்றிவைத்தது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

நம் தீபாவளி பண்டிகை யுனஸ்கோவின் பாரம்பரிய கலாச்சார பட்டியலில் இணைந்தது,

தமிழகத்தின் செஞ்சி கோட்டை உட்பட மகராஷ்டிர மாநிலத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 12 கோட்டைகள் யுனஸ்கோ பாரம்பரிய பட்டியலில் இணைந்தது நம் நாட்டின் கலாச்சார ஆற்றலை பறைசாற்றுகிறது.

வந்தேமாதரம் தேசிய பாடலின் 150ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி ஒரு கோடியே 60 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அப்பாடலை பாடி தேசிய இயக்கமாக அதனை முன்னெடுத்து சென்றது தேசபற்றின் பெருமை மிகு தருணமாகும்.

பிரதமர் வாய்ஸ்

பிரயாக்ராஜில் 66 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் மகா கும்ப நிகழ்வில் பங்கேற்றது,

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150ஆவது பிறந்த ஆண்டு ஒற்றுமை தினமாக கொண்டாடப்பட்டது,

பாரதிய ஜன்சங் அமைப்பின் நிறுவனரான டாக்டர் ஷியாம் பிரசாத் முகர்ஜியின் 125ஆவது பிறந்த நாள் கொண்டாட்டங்கள் போன்றவை 2025-ம் ஆண்டு கலாச்சார பெருமைகளுக்கு சான்றாக திகழ்கின்றன.

**************

<u>கலிதாஜியா</u>

வங்கதேசத்தின் முன்னாள் பிரதமரும், பங்களாதேஷ் தேசிய கட்சி தலைவருமான கலிதா ஸியா உடல்நலக்குறைவால் டாக்காவில் இன்று காலமானார்.

அவருக்கு வயது 80.

தனியார் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனிற்றி உயிரிழந்தார்.

அன்னாரது மறைவிற்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

வங்கதேசத்தின் முதல் பெண் பிரதமராக அந்நாட்டின் வளர்ச்சிக்கும், இந்தியா - வங்கதேச உறவுகளை முன்னெடுத்து செல்வதிலும் அர்ப்பணிப்புடன் செயலாற்றியதாக பிரதமர் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அன்னாரது தொலைநோக்கு பார்வையும், வழிகாட்டலும், இந்தியா - வங்தேசம் இடையேயான நட்புறவை முன்னெடுத்து செல்லும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**************

<u>முதலமைச்சர்</u>

தமிழக அரசின் மக்கள் நல திட்டங்களை முன்னெடுத்து செல்வது குறித்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று ஆலேசானை மேற்கொண்டார்.

நிதி, பொதுப்பணி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் கூடுதல் தலைமை செயலாளர்கள் பங்கேற்ற இக்கூட்டத்தில்

அரசின் திட்ட செயலாக்கம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

**************

<u>உதயநிதி</u>

தமிழகத்தில் 10 லட்சம் மாணாக்கருக்கு விரைவில் மடிகணினிகள் வழங்கப்படும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவையில் பல்வேறு புதிய திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், பள்ளிகளில் காலை உணவு திட்டம் மூலம் 20 லட்சம் குழந்தைகள் பயனடைந்து வருவதாக கூறினார்.

தமிழ்நாட்டில் ஒருகோடியே 30 லட்சம் பேர், மகளிர் உரிமை தொகையை பெறுவதாக எடுத்துரைத்த அவர், இலவச பேருந்து பயணத்தால் மகளிர் பெரிதும் பயனடைந்து வருவதாக எடுத்துரைத்தார்.

கோவை ஆர்.எஸ்.புரத்தில் 9 அரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான ஹாக்கி மைதானத்தையும் அவர் திறந்துவைத்தார்.

முன்னதாக தமிழ்நாடு வனப்படை நவீனமயமாக்கல் நிகழ்ச்சியில் வனப்படையினருக்கு ஆயுதங்களை வழங்கினார்.

சாடிவயல் யானைகள் முகாம், வனஉயிரின இடமாற்றம் மற்றும் சிகிச்சை மையம், தமிழ்நாடு வனத்துறை மின்னணு ஆவண காப்பகம் ஆகியவற்றையும் திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளையும் அவர் வழங்கினார்.

**************

சொர்க்கவாசல்

வைணவ திருக்கோவில்களில் வைகுண்ட ஏகாதசி விழாவின் முக்கிய நிகழ்வான பரமபதவாசல் எனப்படும் சொர்க்கவாசல் திறப்பு பக்தி சிரத்தையுடன் இன்று கோலாகலமாக நடைபெற்றது.

பூலோக வைகுண்டம் என போற்றப்படுவதும், 108 திவ்ய தேசங்களில் முதன்மையானதுமான ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவிலில் சொர்க்கவாசல் திறப்பு ரெங்கா, கோவிந்தா, என்ற பக்தி முழக்கங்களுக்கிடையே வெகு விமரிசையாக நடைபெற்றது.

நம்பெருமாள் அதிகாலை நான்கரை மணிக்கு ரத்தினஅங்கி, பாண்டியன் கொண்டை கிளிமாலை உள்ளிட்ட திருவாபரணங்களுடன் மூலஸ்தானத்திலிருந்து புறப்பாடு கண்டருளி 5.45 மணிக்கு பரமபதவாசலை கடந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

ராணிப்பேட்டை சோழிங்கர் லட்சுமி நரசிம்மர் பெருமாள் திருக்கோவில் பரமபதவாசல் திறப்பு சிறப்பாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

சென்னை திருவல்லிகேணி பார்த்தசாரதி திருக்கோவில்,

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவில்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருள்மிகு ராஜகோபாலசுவாமி,

பெரம்பலூர், அரியலூர் தர்மபுரி செங்கல்பட்டு காஞ்சிபுரம் கள்ளக்குறிச்சி நாமக்கல் கன்னியாகுமரி தென்காசி திருவள்ளூர் உள்ளிட்ட மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள பெருமாள் திருக்கோவில்களில் வைகுண்ட ஏகாதசி பெருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**************

<u>மீனவர்கள்</u>

இலங்கை நெடுந்தீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 3 பேரை இலங்கை கடற்படையினர் இன்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

ராமேஸ்வரத்திலிருந்து நேற்று மீன்பிடிக்க சென்ற இம்மீனவர்களை கச்சதீவு - நெடுந்தீவு இடையே எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இவர்களை கைது செய்த இலங்கை கடற்படையினர் அவர்களது படகையும் பறிமுதல் செய்துள்ளது.

**************

<u>கிரிக்கெட்</u>

இந்திய இலங்கை மகளிர் அணிகளுக்கிடையேயான 5ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் இன்று நடைபெறுகிறது.

ஏற்கனவே முடிவடைந்த 4 போட்டிகளில் வெற்றி பெற்று, இந்திய அணி தொடரை கைப்பற்றியுள்ளது.

**************